https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புது சுடர்

உண்மைக்கே முதலிடம்

23rd JUNE 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 85

## ரணில் – பசில் சந்திப்பில் குழப்பம்

தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பிலும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் ஒவ்வொரு வாரமும் இடம்பெற்று வரும் சந்திப்பில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் இடம்பெற்ற சந்திப்பில் ஜனாதிபதியின் சார்பில் மேலும் பல அரசியல்வாதிகள் கலந்து கொண்டமையே

02









## கட்சி தாவல்: அமைச்சரவை மாற்றம் அடுத்த வாரம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை வெற்றிகொள்ளும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் நடவடிக்கையின் ஓர் அங்கமாக அடுத்த வாரம் எதிர்க்கட்சியில் இருந்து சிலர் அரசுடன் இணையவுள்ளனர் என்றும் அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை வழங்குவதற்காக அமைச்சரவை மாற்றம் இடம்பெறவுள்ளது என்றும் ஜனாதிபதி வட்டாரம் தெரிவிக்கிறது.

இவர்கள் இணைந்தவுடன் ஜனாதிபதியின் தேர்தல் பிரசார பணிகளை

02

## மொட்டின் கொள்கையை பாதுகாப்பவரே ஜனாதிபதி வேட்பாளர்

மொட்டு கட்சியின் கொள்கையை பாதுகாக்கும் ஒருவரே தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்று நாமல் ராஜபக்ஸ எம்பி கூறியுள்ளார்.

இக்கூற்றின் மூலம்,ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்கவுக்கு மொட்டு கட்சி ஆதரவு வழங்காது என்று நாமல் மறைமுகமாகத் தெரிவித்துள்ளார் என உணர முடிகிறது.

மொட்டு கட்சியில் இருந்து விலகி ஜனாதிபதியுடனும் ஏனைய கட்சிகளுடனும் இணைந்தவர்கள் தமக்குத் தேவையில்லை என்றும் அவர்களுடன் கூட்டணி ஏற்படுத்தப்படமாட்டாது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

### மொட்டு வேண்டுமா? நாங்கள் வேண்டுமா?

## ஜனாதிபதி உடனடியாகத் தீர்மானிக்க வேண்டும்



ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்காக ரணில் விக்ரமசிங்க மொட்டு கட்சியின் பின்னால் செல்வதையும் பசிலை அழைத்து வாரம் தோறும் சந்திப்பு நடத்துவதையும் நிமால் லன்சா தரப்பு விரும்பவில்லை.

நாம் வேண்டுமா அல்லது மொட்டு கட்சி வேண்டுமா என்று லன்சா தரப்பு ஜனாதிபதியிடம் காட்டமாகக் கேள்வி எழுப்பியுள்ளது.

ரணிலின் வெற்றிக்காக கட்சிகளை வளைத்துப் போட்டு கூட்டணி அமைக்கும் பணியை லன்சா தரப்பு மேற்கொண்டு வருகிறது.

மொட்டுடன் ரணில் அதிகம் நெருங்கிச் செல்வதை லன்சா தரப்பு விரும்பாததால் இப்போது அந்தக் கூட்டணிக்குள் சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

மொட்டின் உறவை துண்டிக்காவிட்டால் தாம் சுயாதீனமாக செயற்படப் போவதாகவும் லன்சா தரப்பு ஜனாதிபதிக்கு எச்சரித்துள்ளது.

## பொன்சேகாவின் ஆதரவு யாருக்கு?



சஜித்துடன் முரண்பட்டுக்கொண்டிருக்கும் சரத் பொன்சேகா தற்போது சஜித்துக்கு எதிராக பிரசாரம் பண்ணத் தொடங்கியுள்ளார்.

கெசினோகாரர்களின் பணத்தை வைத்து பாடசாலைகளுக்கு பொருட்கள் வழங்குபவர்களை நாட்டின் ஜனாதிபதியாக்கினால் நாடு அழிந்துவிடும் என்று பொன்சேகா நாடாளுமன்றில் சஜித்தை மறைமுகமாக போட்டுத் தாக்கினார்.

இதன் மூலம் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்கப்போகிறார் என்ற கேள்வி எழுகிறது.



புது சுடர்
www.puthusudar.lk
2024 JUNE 23 - SUNDAY

# கட்சி தாவலும் அமைச்சரவை மாற்றமும்

அதிகாரம்-சலுகைகளுக்கு பின்னால் ஓடுகின்ற அரசியல்வாதிகள்தான் அதிகம். மக்கள் சேவை அவர்களுக்கு இரண்டாம் பட்சம்தான். ஆனால்,வாக்கு சேகரிப்பதோ மக்களுக்கு சேவை செய்வோம் என்று கூறித்தான்.

அவர்களின் இலக்கு கோடிக்கணக்கில் பணம் சம்பாதிக்க வேண்டும். சொத்துக்கள் சேர்க்க வேண்டும். பெரிய வர்த்தகத்தில் ஈடுபட வேண்டும்.

அரசியல் என்பதே பணம் சம்பாதிக்கும் ஒரு வர்த்தகத் துறைதான்.அவ்வாறு பணம் சம்பாதிக்கும் மனோநிலையில் அரசியலுக்குள் வருபவர்களால் எதிர்க்கட்சியில் அமர முடியாது.அரசுடன் இணைய வேண்டும்.எந்த தரப்பு ஆட்சியில் இருக்கிறதோ அந்தத் தரப்புடன் சேர வேண்டும். அமைச்சுப் பதவிகளை பெற வேண்டும்.பணம் சம்பாதித்தல் என்ற அவர்களின் இலக்கை அடைய வேண்டும்.

இப்போதும் அதுதான் நடக்கிறது.பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து பலர் அரசுடன் இணைவதற்கான முயற்சியில் நீண்ட நாட்களாக ஈடுபட்டு வருகின்றமை எல்லோரும் அறிந்த விடயம்.

ஜனாதிபதி தேர்தல் நெருங்குவதால் அடுத்த வாரமளவில் அந்த இணைவு இடம்பெறும் என்றும் இணைபவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியானதும் முதலில் ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் அவருடன் போய் இணைந்துண்டு அமைச்சுப் பதவிகளை பெற்றனர்.

அவர்களின் முயற்சியாலேயே மேலும் சிலரை அந்த அரசில் இணைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ராஜித சேனாரத்ன அவர்களில் ஒருவர்.அவர் வெளிப்படையாகவே அரசுக்கு ஆதரவாகப் பேசி வருகிறார். ஆனால்,அவர் விரும்புகின்ற அமைச்சு கிடைத்தால் மாத்திரம்தான் அரசுடன் இணைதல் என்ற நிலைப்பாட்டில் உள்ளார்.

அவர் எதிர்பார்ப்பது சுகாதார அமைச்சை. கடந்த நல்லாட்சியிலும் அவர் வகித்தது அதே அமைச்சைத்தான்.இப்போதுதான் எதிர்பார்க்கிறார். அதற்காகவே காத்து கிடக்கிறார்.

ஆக,அமைச்சுக்காகத்தான் இணையப் போகிறார் என்பது நிரூபணம்.ஏனையவர்களும் இதன் நோக்கத்துக்காகவேதான் இணையவுள்ளனர்.

இப்படி அமைச்சுப் பதவியை நோக்கியதாகவே இவர்களின் அரசியல் பயணம் அமைந்துள்ளது.இந்த அரசு அடுத்த முறை ஆட்சிக்கு வருமா இல்லையா என்றெல்லாம் தெரியாது.

இருக்கின்ற காலத்துக்குள் எவ்வளவு சுருட்ட முடியுமோ அவ்வளவு சுருட்டுதல்.ஆட்சி மாறினால் மீண்டும் அந்த அரசுடன் போய் ஒட்டுதல். அமைச்சுப் பதவிகளை எடுத்தல்.

இப்படியான மனோநிலையில் அதிகமான அரசியல்வாதிகள் அலைந்து திரிவதுதான் இப்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்.

இவர்கள் உரிய நேரத்தில் செய்ய வேண்டியதை செய்திருந்தால்-அவர்களின் கடமையை சரியாக நிறைவேற்றி இருந்தால் நாடு இந்த நிலைக்குச் சென்றிருக்காது. அவர்களின் பைகளை நிரப்ப முயற்சித்தமைதான் எல்லா பிரச்சினைக்கும் கரணம்.

இவ்வாறான அரசியல்வாதிகளை மக்கள் முதலில் அடையாளம் காண வேண்டும். அவர்களை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கான வேலையை முதலில் செய்ய வேண்டும்.இல்லாவிட்டால் மக்கள் இப்படியே தொடர்ந்து கஷ்டப்பட வேண்டியதுதான்.

## கட்சி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

**இவர்கள் முன்னெடுத்துச் செல்வர் என்று அந்தத் தகவல் மேலும் தெரிவிக்கிறது.**

**ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் நோக்கில் இதுபோன்ற பல வியூகங்களை ஜனாதிபதி வகுத்துள்ளார் என்றும் அடுத்தடுத்து அந்த வியூகங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்றும் ஜனாதிபதி வட்டாரம் மேலும் கூறுகிறது.**

## ரணில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் குழப்பத்துக்குக் காரணம்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,மஹிந்த அமரவீர,துமிந்த சில்வா மற்றும் வஜிர அபயவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதை பசில் விரும்பவில்லை.இந்தச் சந்திப்பில் பசிலுக்கும் பிரசன்னவிற்கும் இடையில் வாய்த் தர்க்கமும் ஏற்பட்டது.

இதனால் அடுத்த சந்திப்பு இடம்பெறுமா என்பது சந்தேகமே.அப்படி இடம்பெற்றாலும்,வழமைபோல் பசிலும் ரணிலும் மாத்திரமே கலந்துகொள்ள வேண்டும் என்று பசில் தரப்பு தெரிவித்துள்ளது.









# வெல்லுமா ரணிலின் வியூகம்?

தேர்தல் இன்னும் அறிவிக்கப்படாதபோதிலும்-உரிய நேரத்தில் தேர்தல் நடக்குமா என்ற கேள்வி எழுகின்றபோதிலும் தேர்தல் அறிவிக்கப்பட்டது போன்றதொரு கள நிலவரம்தான் இப்போது தென்படுகிறது.

கட்சிகள் எல்லாம் பரபரப்பாகியுள்ளன.இப்போதே கூட்டணி அமைக்கத் தொடங்கியுள்ளன. பிரசாரங்களை நாடுபூராகவும் தொடக்கியுள்ளன.ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு துடிக்கின்றன.

இதேவேளை,ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க அந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கான ஏற்பாடுகள் ஒருபுறமும் அதை ஒத்திப்போடுவதற்கான ஏற்பாடுகள் இன்னொரு புறமும் என இரண்டு வகையான செயற்பாடுகளை அரசு மேற்கொண்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

கூட்டணி அமைத்தல்,ஏனைய கட்சி எம்பிக்களுக்கு வலைவீசுதல்,மக்களுக்கு வாக்குறுதிகளை அள்ளிவீசுதல் மற்றும் கூட்டங்களை நடத்துதல் என அரசின் தேர்தல் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

அதை செய்துகொண்டே,தேர்தலை ஒத்திப்போடுவதற்கான தந்திரோபாய நகர்வுகளை ரணிலுக்கே உரிய பாணியில் செய்து வருகிறார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளர் பாலித ரங்கேபண்டா இது தொடர்பில் முதல் குண்டைத் தூக்கிப்போட்டார்.

இரண்டு வருடங்களுக்கு தேர்தலை ஒத்திப்போடுவதற்காக சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று அவர் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

அந்த யோசனை எடுபடவில்லை. அனைவரும் எதிர்க்கத் தொடங்கினர். மொட்டு கட்சிகூட இதற்கு ஆதரவில்லை.

இதனால் அது அப்படியே அடங்கிப்போனது.இருந்தும்,ஒத்திப்போடல் முயற்சியை ஜனாதிபதி கைவிடவில்லை.இன்னொரு முயற்சியை ரணில் மேற்கொண்டுள்ளார். அதுதான் சர்வஜன வாக்கெடுப்பின்றி நாடாளுமன்றத்தின் ஊடாக ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்தல்.

6 வருடங்களாக இருந்த ஜனாதிபதியின் ஆயுட்காலம் 19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக 5 வருடங்களாக குறைக்கப்பட்டது.

குறைக்கப்பட்ட அந்த ஒரு வருடத்தை மீண்டும் பெற்றுக்கொள்ள முடியும் என்று சில சட்ட வல்லுநர்கள் ரணிலுக்கு ஆலோசனை வழங்க,இப்போது அந்த ஒரு வருடத்தை இணைத்துக்கொண்டு ஒரு வருடத்துக்கு ஜனாதிபதியின் ஆயுட்காலத்தை நீடித்து தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திப்போடும் வேளையில் ஜனாதிபதி இறங்கியுள்ளார்.

ஆனால்,இந்த முயற்சிக்கும் மொட்டு கட்சி எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. தேர்தல் ஒத்திப்போடப்படக்கூடாது .உரிய நேரத்தில் நடத்தப்பட வேண்டும் என்பதே மொட்டு கட்சியின் நிலைப்பாடு என்று பொது செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

மொட்டு கட்சியின் ஆதரவு இல்லாமல் ரணிலால் நாடாளுமன்றில் எந்தவொரு பிரேரணையையும் சட்ட மூலத்தையும் நிறைவேற்ற முடியாது.இந்த நிலையில்,தேர்தலை ஒத்திப்போடும் ரணிலின் இந்த முயற்சியும் வெற்றிபெறப் போவதில்லை என்று சொல்லலாம்..

ஜனாதிபதி தேர்தலை எந்தவகையிலும்,ஒத்திப்போட முடியாது என்று அரசமைப்பு கூறும்போது,பெரும் ஜனநாயகவாதியாகத் தன்னைக் காட்டிக்கொள்ளும் ரணில் விக்ரமசிங்க எதற்காக சட்டத்தையும் மீறி-ஜனநாயத்தையும் மீறி தேர்தலை ஒத்திப்போடுவதற்கு முயற்சி செய்கிறார் என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்கு அரச தரப்பில் பல தரப்பட்ட பதில்களும் விளக்கங்களும் கூறப்பட்டாலும் கூட, தேர்தலை ஒத்திப்போடுவதற்கான உண்மையான காரணம் தோல்வி பயமே அன்றி வேறில்லை என்பதுதான் உண்மை.

வெல்ல முடியும் என்றால் ஒருபோதும் எந்த ஆட்சியாளர்களும் தேர்தலை ஒத்திப்போட விரும்பமாட்டார்கள்.இப்போதைய ஜனாதிபதியை நியமித்தது மக்கள் அல்ல.நாடாளுமன்ற உறுப்பினர்கள் .அதாவது,மொட்டு கட்சி உறுப்பினர்கள். கோத்தாவின் மிகுதி காலத்தைத்தான் ரணில் பாரமேற்றுள்ளார்.

ரணிலை மக்கள் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் முற்றாக நிராகரித்துவிட்டார்கள்.கோத்தா ஜனாதிபதி பதவியை விட்டு ஓடியதும் அந்த இடத்தை நிரப்புவதற்கு வேறு எவரும் மொட்டு கட்சிக்கு கிடைக்காததால் ரணிலை அவர்கள் ஜனாதிபதியாக்கினர்.

அன்றைய சூழலில் மக்களிடமிருந்து ராஜபக்ச குடும்பம்-மொட்டு கட்சி பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கியது. அந்த ஆபத்தில் இருந்து இவர்களை காப்பாற்றுவதற்கு ரணில்தான் பொருத்தமானவர் என்று ராஜபக்ச குடும்பம் அடையாளம் கண்டதால் ரணிலை ஜனாதிபதியாக்கினர்.

எந்த நோக்கத்துக்காக ரணில் நியமிக்கப்பட்டாரோ அந்த நோக்கத்தை சரியாக நிறைவேற்றியுள்ளார்.ராஜபக்ச குடும்பத்தின் பாதுகாப்பு முற்றாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ரணில் ஜனாதிபதியாகி மின் வெட்டையும் எரிபொருள் வரிசையையும் நீக்கியுள்ளார். ஆனால்,பொருளாதார பிரச்சினை கூடியுள்ளது.

அவர் வந்த பின்தான் மின் கட்டணம் உட்பட பல கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டன்ன.புது புது வரிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.விலைவாசி அதிகரித்தது..

ஆனால்,பொருளாதாரத்தை சரி செய்துவிட்டோம் என்று அரசு கூறித் திரிகிறது.ஆனால்,அடிமட்டத்தில் நிலைமை வேறு.மக்களுக்கு தொடர்ந்து பிரச்சினைதான்.

இதன் காரணமாக மக்கள் இந்த அரசை கவிழ்ப்பதற்குத் தயாராகி வருகின்றனர் என்ற புலனாய்வு அறிக்கை ஜனாதிபதியிடம் சென்றுவிட்டது.இதனால்தான் தேர்தலை ஒத்திப்போட்டு இன்னும் சிறிது காலம் ஜனாதிபதி பதவியை அனுபவித்துவிட்டுப் போவதாற்கு ரணில் விக்ரமசிங்க முற்படுகிறார்.

ஆகவே,தேர்தலை ஒத்திப்போடுவதற்கு ஜனாதிபதி முயற்சி செய்வதன் நோக்கம் தோல்வி பயம்தான் என்பதில் சந்தேகமில்லை.

**ஜனாதிபதி தேர்தலை எந்த வகையிலும், ஒத்திப்போட முடியாது என்று அரசமைப்பு கூறும்போது, பெரும் ஜனநாயக வாதியாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் ரணில் விக்ரமசிங்க எதற்காக சட்டத்தையும் மீறி-ஜனநாயத் தையும் மீறி தேர்தலை ஒத்திப்போடு வதற்கு முயற்சி செய்கிறார் என்ற கேள்வி எழுகிறது.**





> இலங்கை முஸ்லிம் மக்கள் தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும். அவர்கள்தான் சஹ்ரானை பிடித்துக் கொடுத்தார்கள்!

## ஈஸ்டர் தாக்குதல்:

# கோத்தாவுக்கு எந்தத் தொடர்புமில்லை

**கேள்வி : ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமா?**

**கேள்வி : நீங்கள் எந்தப் பக்கம் நிற்கிறீர்கள் ?**

**கேள்வி : தற்போதைய நிலையில்நீங்கள் கூறும் மக்கள் சக்தியை உருவாக்க முடியுமா?**

இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்தின தேரர்.இது தொடர்பில் அவர் வழங்கிய முழுமையான பேட்டி கீழே தரப்பட்டுள்ளது.

**கேள்வி : ஜனாதிபதி தேர்தல் இடம்பெறுமா?**

பதில் : ஜனாதிபதி தேர்தலை நடத்தாமல் இருப்பதற்குத்தான் ரணில் விக்ரமசிங்க விரும்புகிறார். ஆனால்,அரசமைப்பின்படி,தேர்தலை ஒத்திப்போட முடியாது.

அவரால் ஜனாதிபதி தேர்தலில் வெல்ல முடியாது.கொழும்பு மாவட்டத்திலேயே வெல்ல முடியாத ரணிலால் எப்படி முழு நாட்டிலு ம் வெல்ல முடியும்?

அவர் அரசியல்ரீதியாக மரணித்த ஒருவர். அவருக்கு உயிர் கொடுத்தவர் மஹிந்த ராஜபக்ச.ரணில் பெரிய திறமைசாலியும் அல்ல.அரசியலில் அவரது திட்டங்கள் பல பிழைத்துப்போயுள்ளன.

ஆனால்,அரசியலில் நன்றாக நிர்வாகம் செய்யக்கூடிய ஒருவர்.ராஜபக்ச குடும்பத்தைப் பாதுகாக்கும் ஒருவர் தான் மட்டும்தான் என்று அந்தக் குடும்பத்தை பயமூட்டுகிறார்.அதனூடாக மொட்டு கட்சியின் ஆதரவை ரணில் எதிர்பார்க்கிறார்.

அதேபோல்,ஜேவிபி பலமடைவதற்கு இடம் கொடுத்து சஜித் தரப்பையும் மிரட்டி வருகிறார்.

சஜித் தரப்புக்கும் மொட்டு தரப்புக்கும் ரணிலை விட்டால் ஆளில்லை.ரணிலை விட்டால் ஜேவிபி ஆட்சியைப் பிடித்துவிடும் என்று மாயை ஒன்றை உருவாக்கியுள்ளார்.

அதனூடாக மேற்படி இரண்டு தரப்புகளினதும் ஆதரவை அவர் வேண்டி நிற்கிறார்.

19ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதியின் ஆயுட்காலம் 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைக்கப்பட்டது. குறைக்கப்பட்ட அந்த ஒரு வருடத்தை மீண்டும் சேர்த்துக்கொண்டு ஆட்சியைத் தொடர்வதற்கு ரணில் முயற்சி செய்கிறார்.

நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஊடாக ஒரு வருடத்தைக் குறைக்க முடியும் என்றால் அந்த ஒரு வருடத்தை மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஊடாக ஏன் மீண்டும் சேர்க்க முடியாது என்பதுதான் ரணிலின் கேள்வி.

அந்த ஒரு வருடத்தில் சஜித்தையும் ஜேவிபியையும் வீழ்த்திவிடலாம் என்று ரணில் நம்புகிறார்.

**கேள்வி : நீங்கள் எந்தப் பக்கம் நிற்கிறீர்கள் ?**

பதில் : நான் ஒரு பக்கமும் சாயவில்லை.இந்த நாடு இப்போது பொருளாதார ரீதியில் தோல்வியடைந்த நாடு.இது தொடர்பில் நாம் எதையாவது செய்ய வேண்டும்.சும்மா இருக்க முடியாது.

மீண்டும் நாடாளுமன்றம் செல்லும் விருப்பம் என்னிடமில்லை. ஆனால்,நாட்டுக்காக மரணிக்கும்வரை அரசியல் செய்வதுதான் எனது விருப்பம்.

அரசியல் செய்வதற்கு நாடாளுமன்றம் செல்லத் தேவை இல்லை.சமயத் தலைவராக இருந்துகொண்டு,பொது அமைப்புகளில் இருந்துகொண்டு நாடாளுமன்றத்துக்கு வெளியே அரசியல் செய்ய முடியும்.

ரணில் மொட்டு கட்சியில் இருந்து அரைவாசி பேரை பிரித்தெடுத்துவிட்டார். அவர்களுக்கு அமைச்சுப் பதவிகளை கொடுத்து சுகபோக வாழ்க்கையில் உலவ விட்டுள்ளார்.

குடும்பம் ஆட்சி செய்கின்ற மொட்டு கட்சியை விட ரணில் நல்லம் என்று ரணிலுடன் போனவர்கள் எண்ணுகிறார்கள்.

ரணில் விக்ரமசிங்க கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தோல்வியடைந்தார்.இப்போது கொழும்பு மாவட்டத்தை வெல்ல முடியும்.

ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் வாய்ப்பு ஜேவிபியின் பக்கமே அதிகமாக உள்ளது.

இந்த நிலையில்,நான் எந்த வேட்பாளரின் பக்கமும் சாயவில்லை.தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கி ஆக குறைந்தது 10 லட்சம் வாக்குகளையாவது திரட்டுவோம். அதன் பின் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை நிறுத்துவோம்.

இதுதான் எமது இலக்கு.

**கேள்வி : தற்போதைய நிலையில் அப்படியொரு சக்தியை உருவாக்க முடியுமா?**

பதில் : ஒரு சம்பவம் போதும் எல்லாமே தலைகீழாக மாறும். வெகு இலகுவாக அந்த சக்தியை உருவாக்க முடியும்.

**கேள்வி : ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக கோத்தாபயா ராஜபக்சமீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் பற்றி உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : கோத்தாவை ஆட்சிக்கு கொண்டுவருவதற்காக ஸஹ்ரான் நடத்திய தாக்குதல் என்று சொல்கிறார்கள்.இது பொய். கோத்தாமீது உள்ள கோபம் காரணமாக அவரைப் பழிவாங்குவதற்காக இப்படி கூறுகிறார்கள்.

கோத்தவால் இப்படி எட்டு பேரை அதுவும்,பணக்கார இளைஞர்களை தற்கொலை குண்டுதாரிகளாக மாற்ற முடியுமா?.ஈஸ்டர் தாக்குதலுக்கும் கோத்தாவுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

சஹ்ரானால் உருவாக்கப்பட்ட அடிப்படைவாதம் இன்னும் நாட்டில் உள்ளது..இந்த அடிப்படைவாதம் இஸ்லாம் சமயத்தின் ஊடாகவே வருகிறது.

ஸஹ்ரான் தொடர்பில் அரசியல்வாதிகள் கேள்வி எழுப்புவதில்லை.அப்படி கேள்வி எழுப்பினால் முஸ்லிம்களின் வாக்குகள் அவர்களுக்கு கிடைக்காது என்று அவர்கள் பயப்புடுகிறார்கள்.

இலங்கையை சேர்ந்த ஐஸ் உறுப்பினர்கள் நால்வர் இந்தியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை முஸ்லிம் மக்கள் தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்.அவர்கள்தான் சஹ்ரானை பிடித்துக் கொடுத்தார்கள்.

அதேபோல்,குருநாகல் வைத்தியசாலை வைத்தியர் ஷாபி சிஹாப்தீன் தொடர்பிலோ மலட்டுத்தன்மை ஏற்படுத்தும் கொத்துரொட்டி தொடர்பிலோ நான் எதுவும் பேசவில்லை.

ஷாபி தொடர்பில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தவர்கள் அவரிடம் சிகிச்சை பெற்ற பெண்கள்தான்.அவரிடம் சிகிச்சை பெற்றதன் பின் குழந்தை பிறக்கவில்லை என்று கூறினர். அவ்வாறு கூறிய பெண்கள் பலருக்கு இப்போது குழந்தை கிடைத்தும் உள்ளது.–என்று கூறினார்.





# லேசர் மூலநோய் அறுவை சிகிச்சை அறிமுகம்

நவலோக்க மருத்துவமனை முதல் முறையாக லேசர் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி செய்யப்படும் மூலநோய் அறுவை சிகிச்சையை அண்மையில் அறிமுகப்படுத்தியது. தனியார் துறையில் இலங்கை வைத்தியசாலை ஒன்றின் ஊடாக லேசர் மூலநோய் சத்திரசிகிச்சை அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது சந்தர்ப்பமும் இதுவாகும்.

இந்த லேசர் மூலநோய் அறுவைசிகிச்சையானது எந்த திசுக்களையும் அகற்றாது மற்றும் சேதமடைந்த திசுக்களை உறைய வைக்க ஒரு சிறந்த லேசர் கற்றையைப் பயன்படுத்துகிறது. மூலநோய்க்கான இந்த சமீபத்திய சிகிச்சை முறையால், நோயாளிகள் வலியின்றி மிக விரைவாக குணமடையவும், 2 நாட்களுக்குப் பிறகு குணமடையவும் வாய்ப்பு உள்ளது.

லேசர் கதிர்களைப் பயன்படுத்தி இந்த அறுவை சிகிச்சை செய்யப்படுவதால், அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்படும் நோயாளி அனுபவிக்கும் வலி மிகக் குறைவு. மேலும், பொது அறுவை சிகிச்சைக்குப் பிறகு இரத்தப்போக்கு மற்றும் அறுவை சிகிச்சையால் ஏற்படும் சிக்கல்கள் போன்ற அபாயங்கள் கணிசமாகக் குறைக்கப்படுகின்றன, எனவே சிகிச்சையின் பின்னர் குணமடைவது விரைவாக இருக்கும் மற்றும் அறுவை சிகிச்சையின் தொடர்ச்சியான பரிசோதனைகள் தேவையில்லை.

இன்று, இந்த மூலநோய் உலக மக்கள்தொகையில் கணிசமான எண்ணிக்கையை பாதிக்கிறது, இது உலக மக்கள்தொகையில் 4.4% ஆகும். 50 வயதுக்கு மேற்பட்டவர்களில் 50% க்கும் அதிகமானோர் தங்கள் வாழ்வின் எந்த நேரத்திலும் மூல நோய் வர வாய்ப்புள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது.

# Street Burger நாவலையில்




இலங்கையின் அசல் சுவையான பர்கர்களின் வீடான 'Street Burger' இப்போது நாவலையில், அதன் 4வது கிளையினை திறந்து வைத்துள்ளது.

உணவகத்தின் உயர்ந்து வரும் பிரபலத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையிலும், அதிகமான வாடிக்கையாளர்களை ஈர்க்கும் வகையிலும், நாடு முழுவதும் உள்ள உள்நாட்டு சங்கிலியின் தொடர்ச்சியான விரிவாக்கத்தின் ஒரு பகுதியாக இந்தக் கிளையின் திறப்புவிழா அமைகிறது .

“பிரத்தியேகமாக கையால் வடிவமைக்கப்பட்ட பர்கர்கள் மற்றும் அதன் தனித்துவம்மிக்க சுவைகளை மக்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், மேலும் நாங்கள் இப்போது நாவலையில் உள்ள எங்களது புத்தம் புதிய விற்பனை நிலையத்திற்கு வாடிக்கையாளர்களையும் உள்ளூர்வாசிகளையும் வரவேற்பதற்கு ஆவலுடன் காத்திருக்கிறோம்,“ என்று ளுவசநநவ டீரசபநசன் இணை ஸ்தாபகரும் பணிப்பாளருமான மசூன் சமூன் தெரிவித்தார்.

“இலங்கையில் பர்கர் தயாரிப்பில் புரட்சியை ஏற்படுத்தியதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம், மேலும் சுவையுடன் கூடிய புதுமையான மெனுவை வழங்குவதன் மூலம் எம்மை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம்.“ என்றும் மேலும் அவர் குறிப்பிட்டார்.

# துறைசார் நிபுணர்களை வலுப்படுத்தும் SLIIT MSc பட்டப் பாடத்திட்டம்




மாணவர்களுக்கு அவர்களின் எல்லைகளை விரிவுபடுத்துவதற்கும், திறன்களை மேம்படுத்துவதற்கும், தகுதிகளை விஸ்தரிப்பதற்குமான தளத்தை வழங்கும் SLIIT இன் முதுமானி விஞ்ஞான (MSc) பட்டப்பாடத்திட்டம் புதிய வாய்ப்புக்களை ஏற்படுத்தக்கூடிய தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட பாடநெறிகளின் ஊடாக துறைசார்ந்த நிபுணர்களை வலுப்படுத்துவதற்கான சிறந்த தீர்வை வழங்குகின்றது.

MSc முதுமானி விஞ்ஞானப் பட்டப்படாத்திட்டமானது பல்வேறு பாடநெறிகளை அதாவது தகவல் தொழில்நுட்பத்தில் MSc, தகவல் முகாமைத்துவம், தகவல் கட்டமைப்பு, சைபர் பாதுகாப்பில் சிறப்பைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்துறை செயலிகள் உருவாக்கத்தில் சிறப்பைக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றில் MSc பட்டத்தைப் பெறுவதற்கான பல்வேறு தெரிவுகளைக் கொண்டுள்ளது.

ACU மற்றும் IAU ஆகியவற்றில் கிடைத்துள்ள ங்கத்துவத்தின் அடிப்படையில் SLIIT உலகளாவிய அங்கீகாரத்தினைப் பெற்றிருப்பதால், சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இணங்கும் வகையில், மாணவர்களுக்குப் போட்டித்தன்மையை வழங்கி, அந்தத் துறைகளில் அவர்களை வெற்றிபெற வைப்பதற்கான கடுமையான MSc பாடத்திட்டங்களை வழங்குகின்றது.

தகவல் தொழில்நுட்பத்தில் MSc பட்டப்பாடத்திட்டமானது மென்பொருள் பொறியியல், கணினி வலையமைப்பு, ஈ–வர்த்தக தொழில்நுட்பம், தகவல்தள முகாமைத்துவம் மற்றும் வணிகத் தகவல் கட்டமைப்பு ஆகிய விடயங்களில் விரிவான திறனை வழங்குகின்றது.

# முதலீட்டாளர் வீசா திட்டம் மீள் அறிமுகம்

ஆதனத் துறையில் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கான ஒரு மூலோபாய நகர்வாக, “முதலீட்டாளர் வீசா” திட்டத்தை இலங்கை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் மீளவும் அறிமுகப்படுத்தியுள்ளது.

அடுக்குமனைகளை கொள்வனவு செய்ய விரும்புகின்ற இலங்கை பிரஜைகள் அல்லாதவர்களை குறிப்பாக இலக்கு வைக்கும் வகையில், மீளமைக்கப்பட்ட இந்த முயற்சி, 2024 ஜூன் 01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வந்துள்ளது. திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் 2024 மே 22 அன்று இடம்பெற்ற வெற்றிகரமான சந்திப்பொன்றைத் தொடர்ந்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கட்டுப்பாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய அவர்கள் தலைமையில் முன்னெடுக்கப்படுகின்ற முதலீட்டாளர் வீசா திட்டமானது நாட்டின் ஆதனச் சந்தையில் முதலீடு செய்ய ஆர்வமாகவுள்ள இலங்கைப் பிரஜைகள் அல்லாதவர்களுக்கு சீரமைக்கப்பட்ட, திறன்மிக்க நடைமுறையொன்றுக்கு உறுதியளிக்கின்றது.

இந்த முறைமை அடுத்த வாரமளவில் முழுமையாக தொழிற்பாட்டுக்கு வருவதுடன், வீசா விண்ணப்பங்கள் அனைத்தும் முற்றிலும் இணைய வழியாக நடைமுறைப் படுத்தப்படுவதை உறுதி செய்து, முதலீட்டாளர்களாக மாற வாய்ப்புள்ளவர்களுக்கு இலகுபடுத்தப்பட்ட செயல்முறைக்கு இடமளிக்கின்றது.



# Aviator Prime HD அறிமுகம்




SLT-MOBITEL இன் புதிய Aviator Prime இனால், தடங்கல்களில்லாத களிப்பூட்டும் வீடியோ காட்சிகளை HD தரத்தில் எந்நேரத்திலும், எதற்காகவும் பார்வையிட்டு அனுபவிக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகளை புரிந்து கொண்டும், தடங்கல்களில்லாத இணைப்புடன், anytime இணைய வசதியை வழங்கும் வகையிலும், SLT-MOBITEL இன் புதிய Aviator Prime HD பக்கேஜ்களினால் உயர் மொபைல் அனுபவம் வழங்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமக்கு பிடித்த ஒன்லைன் செயற்பாடுகளை எந்தவித தடங்கல்களுமின்றி மேற்கொள்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

புத்தாக்கமான பக்கேஜ்களினூடாக, அதிவேக இணைய இணைப்பு உறுதி செய்யப்படுவதுடன், வேகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதில்லை. எந்த வலையமைப்புக்கும் அன்லிமிடெட் அழைப்புகளுடன், SMS Bundle களும் வழங்கப்படுகின்றன.

அத்துடன், இணைய வேகங்கள் பற்றி கவலை கொள்ளாமல், Meta மற்றும் YouTube போன்ற சமூக ஊடக தளங்களில் high definition (HD)இல் வீடியோக்களை பார்வையிடும் வசதியும் வழங்கப்படுகின்றது. பாவனையாளர்களுக்கு தமக்கு பிடித்த ஒன்லைன் அம்சங்களை தடங்கல்களின்றி ஸ்ட்ரீம் செய்து, பிரவுஸ் செய்து ஈடுபாட்டை பேணக்கூடிய வகையில் பக்கேஜ்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தடங்கல்களால் ஏற்படும் தாமதங்களிலிருந்து வாடிக்கையாளர்கள் விடுபட்டு, தடங்கல்களில்லாத களிப்பூட்டும் அம்சங்களை பார்வையிடும் சுதந்திரத்தை பெறுகின்றனர்.

புதிய திரைப்படங்கள், சின்னத்திரை நாடகத் தொடர்கள் அல்லது இசையை கேட்டு மகிழ்வது என சகலதையும் இந்த பக்கேஜ்கள் தடங்கல்களின்றி முன்னெடுக்க உதவுகின்றன.

# Penna Cement நிறுவனத்தை கையகப்படுத்திய அதானி குழுமம்



Penna Cement Industries Ltd. நிறுவனத்தை (PCIL) கையகப்படுத்துவதற்கான இணைப்பு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளதாக, பன்முகப்படுத்தப்பட்ட அதானி குழுமத்தின் சீமெந்து மற்றும் கட்டுமானப் பொருள் நிறுவனமான Ambuja Cements Limited நிறுவனம் அண்மையில் அறிவித்துள்ளது.

PCIL இன் 100% பங்குகளை அதன் தற்போதைய விளம்பரதார குழுவான பி. பிரதாப் ரெட்டி மற்றும் குடும்பத்தினரிடமிருந்து கையகப்படுத்தப்படும். இந்த கையகப்படுத்தலுக்கான முழு நிதியுதவியும் அதானி குழுமத்தின் உள்ளக திரட்டல் மூலம் வழங்கப்படும்.

Ambuja Cements நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியும், ஆயுட்கால பணிப்பாளருமான அஜய் கபூர் தெரிவிக்கையில், "இந்த முக்கிய கையகப்படுத்தலானது, அம்புஜா நிறுவனத்தின் விரைவான வளர்ச்சிப் பயணத்தில் ஒரு குறிப்பிடத்தக்க படியாகும்.

PCIL இனை பெறுவதன் மூலம், அம்புஜா தனது சந்தை இருப்பை தென்னிந்தியாவில் விரிவுபடுத்தவும், சீமெந்துத் துறையில் முழு இந்திய அளவிலான தலைவராக தனது நிலையை வலுப்படுத்தவும் தயாராக உள்ளது.

PCIL இன் மூலோபாய ரீதியான அமைவிடம் மற்றும் போதிய சுண்ணாம்புக் கற்களின் கையிருப்பு ஆகியன, மேலதிக முதலீடு மற்றும் திறனைக் குறைப்பதன் மூலம் சீமெந்து அளவை அதிகரிக்க வாய்ப்பளிக்கின்றன – என்றார்.

# 'The Seasons Colombo Eight' அறிமுகம்



இலங்கையின் முன்னணி ரியல் எஸ்டேட் வடிவமைப்பாளரான Prime Lands Residencies PLC, தனது 'The Seasons Colombo Eight' திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

கொழும்பு 8 இன் பெருமைக்குரிய வதிவிடப் பகுதியில், அதி-சொகுசு வாழிட அனுபவத்தை வழங்கும் வகையில் இந்த நவீன கட்டடக் கலை அம்சம் அமைந்துள்ளது.

கொழும்பு 08 பிரதேசத்தின் சந்திரலேகா மாவத்தை மற்றும் ஃபெயார்ஃபீல்ட் கார்டன்ஸ் போன்ற மக்கள் செறிந்து வாழும் பகுதியில் அமைக்கப்பட போகின்றது. வதிவிடத் தொகுதியாக அமைந்துள்ள 'The Seasons Colombo Eight' இனூடாக, பிரத்தியேகமான, உள்ளக மற்றும் விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளத்தக்க சொகுசான வாழிட அனுபவங்கள் கொழும்பின் பிரதான பகுதியில் வழங்கப்படுவதுடன், மட்டுப்படுத்தப்பட்ட 44 வசிப்பிடப் பகுதிகளை மட்டும் வழங்குகின்றது.

வதிவிடங்கள் அனைத்தும், 2000 சதுர அடிப்பரப்பில், மிகச் சிறந்த சௌகரியத்தை வழங்கக்கூடிய வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

இந்தப் புதிய நிர்மாணத் திட்டம் தொடர்பில் Prime Lands Residencies PLC பணிப்பாளர் ஷெஹானா ப்ராஹ்மனகே கருத்துத் தெரிவிக்கையில், "44 வசிப்பிடங்களை மட்டும் கொண்ட 'The Seasons Colombo Eight' எனும் அதிசொகுசு வசிப்பிடத் தொகுதியை அறிமுகம் செய்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

சொகுசான வாழிட அனுபவத்தை மேம்படுத்தும் வகையில் இந்த புதிய திட்டம் அமைந்துள்ளது.

ஒப்பற்ற அனுபவங்களை பெற்றுக் கொடுப்பதற்கான எமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் வகையில் இந்த நிர்மாணத் திட்டம் அமைந்துள்ளது. கொழும்பின் மற்றுமொரு புகழ்பெற்ற முகவரியை பெற்றுக் கொடுப்பதில் நாம் புதிய நியமத்தை ஏற்படுத்தியுள்ளோம். – என்றார்.



# கடற்கரை சுத்தப்படுத்திய INSEE

நீர்கொழும்பு, இலங்கை – உலக சுற்றுச்சூழல் தினம் 2024 ஐக் குறிக்கும் முகமாக, 2024 ஜூன் 14 வெள்ளிக்கிழமையன்று INSEE Cement மற்றும் INSEE Ecocycle ஆகியன இலங்கை பொலிஸ் திணைக்களத்துடன் இணைந்து நீர்கொழும்பு முதல் வத்தளை வரையான கடற்கரைப் பிரதேசத்திலுள்ள 10 இடங்களில் கடற்கரையைச் சுத்தம் செய்யும் பாரிய முயற்சியொன்றை மேற்கொண்டுள்ளன.

நீர்கொழும்பிலுள்ள சரக்குவ கடற்கரையில் இடம்பெற்ற இது குறித்த வைபவ ரீதியான நிகழ்வில் இலங்கை பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், INSEE Cement தலைவர் நந்தன எக்கநாயக்க, INSEE Cement பிரதம நிறைவேற்று அதிகாரி ஜான் குனிக், INSEE Ecocycle பொது முகாமையாளர் சுஜித் குணவர்த்தன, இலங்கை பொலிஸ் திணைக்களம், ஐளேநுநு, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை, உள்ளூர் அதிகார சபைகள், ஏனைய அரச ஸ்தாபனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் பலரும் கலந்து சிறப்பித்துள்ளனர்.

பொலிஸ் அலுவலர்கள், உள்ளூர் சமூக அங்கத்தவர்கள், INSEE பணியாளர்கள், இப் பிரதேசத்திலுள்ள 14 பாடசாலைகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள், பல்வேறு அரச சார்பற்ற நிறுவனங்களின் அங்கத்தவர்கள் என கடற்கரையைச் சுத்தப்படுத்தும் பணியில் 2,000 க்கும் மேற்பட்டவர்கள் பங்குபற்றியிருந்தனர். சூழலைப் பாதுகாப்பதில் சமூகத்தின் ஈடுபாட்டின் முக்கியத்துவத்தை இக்கூட்டு முயற்சி அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.

# இலங்கை வணிகங்களை அச்சுறுத்தும் Ransomware

kaspersky

2023 ஜனவரி முதல் டிசம்பர் வரை இலங்கையில் வணிகங்களுக்கான முயளிநசளமல இணைய பாதுகாப்பு தீர்வுகளால் மொத்தம் 2,650 ransomware சம்பவங்கள் கண்டறியப்பட்டு தடுக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய Cybersecurity நிறுவனத்தின் நிபுணர்கள், அமைப்புகளின் வடிவம் மற்றும் அளவைப் பொருட்படுத்தாமல், ransomware, குறிப்பாக இலக்கு வகை, பிராந்தியத்தில் உள்ள நிறுவனங்களுக்கு தீங்கு விளைவிக்கும் அச்சுறுத்தலாகத் தொடர்ந்து தங்கள் ஐவு பாதுகாப்பு நிலையை மேம்படுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

"தனிநபர்கள் மற்றும் வணிகங்கள் ஆகிய இருவர் மீதும் நஉெசலிவழசகளால் பரவலான வெகுஜன தாக்குதல்களின் சகாப்தம் படிப்படியாக மறைந்து வருகிறது. அதற்கு பதிலாக, தரவு திருட்டு மற்றும் குறியாக்கத்தை உள்ளடக்கிய Hackfis செயல்படுத்தும் ஒழுங்கமைக்கப்பட்ட குழுக்களை நோக்கி நகர்வதை நாங்கள் காண்கிறோம்.

இது பொதுவாக Double extortion (இரட்டை மிரட்டி பணம் பறித்தல்) என்று குறிப்பிடப்படுகிறது.

இந்த பரிணாம வளர்ச்சியின் பின்னணியில் உள்ள காரணம், அதிக செயல்திறனுடன் செயல்படும் குற்றவாளிகளின் திறனில் உள்ளது, இதன் மூலம் அவர்கள் கணிசமாக அதிக மீட்கும் தொகையை கோர முடியும்," என Kasperskyஇன் முன்னணி Malware ஆய்வாளர் Fedor Sinitsyn தெரிவித்தார்.

WWW.PUTHUSUDAR.LK

# ROSPA தங்க விருதுகளை வென்ற MAS KREEDA




உலகளாவிய ஆடைத் துறையில் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றான MAS Holdingsஇன் துணை நிறுவனமான MAS KREEDA, அண்மையில் மேலும் பல தனித்துவமான சாதனைகளை அடைந்துள்ளது.

2023ஆம் ஆண்டுக்கான தமது சுகாதார மற்றும் பாதுகாப்பு செயல்திறன் கொண்ட விபத்துக்களை தடுப்பதற்கான சமூகத்தின் (The Royal Society for the Prevention of Accidents -ROSPA) 10 தங்க விருதுகளை தனதாக்கிக் கொண்டது.

துபாயில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வொன்றின் போது, MAS KREEDA ஆனது பின்வரும் பத்து மூலோபாய வணிக பிரிவுகளை (SUBs) உள்ளடக்கிய தங்க விருதுகளை வென்றது. இதன்படி Kreeda Balangoda Kreeda Methliya, Kreeda Shadeline, Kreeda Synergy, Kreeda Vaanavil, Kreeda Campus, Kreeda Al Safi Sahab, Kreeda Al Safi Dulayl, Kreeda Al Safi Madaba, Kreeda Arya 2 ஆகியன இந்த அங்கீகாரம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தங்க விருதுகளைத் தவிர, MAS இன் மற்றொரு துணை நிறுவனமான Bodyline (Pvt) ROSPA விருது வழங்கும் நிகழ்வில் வெள்ளி விருதையும் வென்றது.

## சுனில் ஜி. விஜேசிங்கவிற்கு பிரியாவிடை





வட்டவளை பிளான்டேஷன்ஸ் பிஎல்சியின் தலைவராக ரியாஸ் மிஹுலரை நியமிப்பதாக அறிவித்தது, சுனில் ஜி. விஜேசின்ஹ, நிறுவனத்துடன் 12 வருட நீண்ட பதவிக் காலத்தை முடித்துவிட்டு பதவி விலகினார்.

ரியாஸ் மிஹுலர் நிதி மற்றும் பெருநிறுவனத் துறைகளில் ஒரு திறமையான நிபுணராவார், அவருடைய வாழ்க்கை முழுவதும் பல்வேறு குறிப்பிடத்தக்க சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்துள்ளார். அவர் 2012 முதல் 2022 வரை KPMG ஸ்ரீலங்கா மற்றும் மாலத்தீவுகளின் முகாமைத்துவ பங்காளராகப் பணியாற்றினார்.

மற்றும் KPMG இன் மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய பிராந்தியக் குழுவின் தலைவராக இருந்தார், அங்கு அவர் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் செயல்பட்டார். மிஹுலரின் நிபுணத்துவம் கணக்கியல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய இரண்டு பிரிவிலும் கடமையாற்றியதுடன், இது இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தின் தவலைவர் மற்றும் கூட்டுறவு ஆகியவற்றில் சிறந்து விளங்கினார்.

தற்போது, மிஹுலர் பல்வேறு பொது நிறுவனங்களின் (PLCs) பணிப்பாளராக உள்ளார், இதில் வட்டவலை பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் சன்ஷைன் ஹோல்டிங்ஸ் PLC ஆகியவை அடங்கும். இவர் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவின் ஆணையாளராகவும், இலங்கை மத்திய வங்கியின் பங்குதாரர் ஈடுபாட்டு குழுவின் உறுப்பினராகவும் உள்ளார்.

## செலான் வங்கியின் புது திட்டம்



செலான் வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) மற்றும் இலங்கை அரசாங்கத்துடன் (GoSL) இணைந்து, சிறிய மற்றும் நடுத்தர தொழில்துறையை (SME) மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டு ADBயிலிருந்து செயற்பாட்டு மூலதனம் மற்றும் நீண்ட காலக் கடன்களை வழங்கவுள்ளது.

பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் உள்ளூர் வணிகங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் செலான் வங்கி, விவசாயம், மீன்பிடி, அலங்கார மீன்வளர்ப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சுற்றுலா மற்றும் ஏற்றுமதி சார்ந்த வணிகங்கள் உட்பட பல்வேறு தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறிய மற்றும் நடுத்தர வணிகங்களுக்கு இந் நிதி உதவியை வழங்கும்.

செலான் வங்கி, இலங்கையில் ADBயின் நிதியுதவியின் ஒரு நிலையான பங்காளியாக இருந்து வருகிறது. ADBயின் கடன் வரம்புகள் மூலம் வங்கியானது கடந்த காலங்களில் சிறிய மற்றும் நடுத்தர வணிகங்கள் மற்றும் சிறு தேயிலை உரிமையாளர்களுக்கு கடன்களை வழங்கியுள்ளது.

தங்கள் செயற்பாட்டு மூலதனத்தை அதிகரிக்க விரும்பும் SMEகள், மூன்று வருட காலத்திற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம் ஊடாக பயனடைவர். மேலதிகமாக, கட்டடம் கட்டி முடிக்கும் பணி, நிலையான சொத்துக்களை வாங்குதல் அல்லது வணிக தேவைக்கான வாகனங்களை வாங்குதல் போன்ற பிற தேவைகளுக்காக, திருப்பிச் செலுத்த ஐந்து வருட கால அவகாசத்துடன் கூடிய கடன்கள் கிடைக்கும்.

## மதுக்கலவை அற்ற குழந்தை நல தயாரிப்புக்கள்

இலங்கையின் முன்னணி குழந்தை நல வர்த்தகநாமமான ஏநடழயெ ஊரனனடநள, எந்தவிதமான மதுக்கலவையுமற்ற,ிஉ 5.5 குழந்தைப் பராமரிப்பு பொருட்களை அறிமுகப்படுத்தி, மீண்டும் ஒரு முறை தமது நியமத்தை மேம்படுத்தியுள்ளது.

டயப்பர் தயாரிப்பு வரிசையில் அடங்கியுள்ள ஏநடழயெ ஊரனனடநள னுயைிநசள ஆனது கடுமையான இரசாயனங்கள் அற்ற உலகின் முதலாவது மற்றும் ஒரேயொரு டயப்பர் என்று பெயர்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 3 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட ஆழமான ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பின் விளைவாக, ளுநடியஅநன மற்றும் ஆரளவநடடய போன்ற முன்னணி ஐரோப்பிய குழந்தை நல வர்த்தகநாமங்களின் தரஒப்பீட்டின் அடிப்படையில் மதுக்கலவை அற்ற இப்புதிய குழந்தை நல தயாரிப்பு அறிமுகமாகியுள்ளது.

குழந்தைக்கு பாதுகாப்பான, மென்மையான மற்றும் உயர் தர தயாரிப்புக்களை அறிமுகப்படுத்துவதில் புத்தாக்கத்தின் மீது ஏநடழயெ ஊரனனடநள கொண்டுள்ள உண்மையான அர்ப்பணிப்பை தெளிவாக பிரதிபலிக்கின்றது.

தனது டயப்பர் தயாரிப்பின் வெற்றியினால் உத்வேகம் கொண்டு அறிமுகமாக்கப்பட்டுள்ள புதிய, மதுக்கலவை அற்ற ஏநடழயெ ஊரனனடநள குழந்தை நல தயாரிப்பு வரிசை, மூன்று கொலோன் வகை, தலை முதல் கால் வரை கழுவும் பேபி வொஷ் மற்றும் ஈரப்பதமூட்டும் லோஷன் அடங்கலாக மிகக் கவனமாக திட்டமிடப்பட்டு வடிவமைக்கப்பட்ட ஐந்து தயாரிப்புக்களை கொண்டுள்ளது.

இத்தயாரிப்புக்கள் அனைத்தும் மதுக்கலவை அற்றவை என்பது மாத்திரமன்றி, மனித உடலின் இயற்கையானிஉ 5.5 மட்டத்திற்கு அமைவாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

